## நாடார் மகாஜன சங்கம்.

### 11-வது கான்பரன்ஸ்.

இக்கான்பரன்ஸை தஞ்சை ஜில்லா கும்பகோணத்தில் நடத்த நமது தலைவர்கள் உத்தேசித்து வேலை துரிதமாக நடப்பதாகத் தெரிகிறபடியால், அகில இந்திய நாடார் சமூகத்தினர்கள் யாவரும் மத பேதமின்றி ஆதரவளித்தும் விஜயம் செய்தும் செவ்வனே நடைபெறச் செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். இத்துடன் கவனிக்கவேண்டிய அம்சம் ஒன்றுளது;—

இச்சங்கமானது தஞ்சை ஜில்லா பிறைபாற்றின் கண் நமது குல திலகமாகிய காலஞ்சென்ற ராவ்பகதூர், த. இரத்தினசாமி நாடார் அவர்களின் பெரும் முயற்சியினால் ஸ்தாபிக்கப்பெற்று மதுரையம்பதியில் வளர்ந்து சுற்று நகரங்களில் உலாவி, தனது 10 விழாக்களையும் அதி விமரிசையுடன் யானை சேனை பரிவாரங்கள் சூழ அரசர்களும் அரும்பெரும் தேசாபிமானிகளும் தலைமை வகிக்க பல்லாயிரக் கணக்கான நம்பிரதிநிதிகள் புடைசூழ வெகு வைபவத்துடன் நடத்திக்கொண்டு, 11-வது விழாவை முடித்துக் கொள்ள இச்சங்கம் பிறந்த தஞ்சை ஜில்லாவிற்கு வருகிறபடியால் இஜ்ஜில்லாவில் வசிக்கும் நமது குலத் தலைவர்கள் யாவரும் பேராதரவளித்து பிரதிநிதிகளாகவும், விஸிட்டர்களாகவும் விஜயம் செய்து சிறப்பாய் நடத்திவைக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

வே. சாமிநாத நாடார்,
திருவாரூர் நாடார் கூட்டுறவுச் சங்கம்
பிரஸிடெண்டு.

குறிப்பு:—மதபேதமின்றியே நமது சங்கம் நடைபெற்றுவருகிறதென்பதை நினைப்பூட்டுகின்றோம்.

[ப-ர்]

### திருவிழாக் கொண்டாட்டம்.

உத்தம கத்தோலிக்கப் பிரியர்காள்! வருடந்தோறும் நடைபெறும் ஆரோக்கிய மாதா மோட்சத்திற்கு எழுந்தருளின திருவிழா சமீபித்துவிட்டது. நிகழும் ஆகஸ்ட் ௴ 6௳ பின்னேரம் 6-மணியளவில் வடக்கன்குளமாநகரில் எழுந்தருளியிருக்கும் திருக்குடும்ப ஆலயத்தில் கொடியேற்றி ஆரோக்கிய மாதாவின் திருவிழா பத்துநாளும் ஜெப தப பூசை பிரார்த்தனை சப்ரமெழுந்தேற்றத்துடன் வெகு கெம்பீரமாக நடைபெறுவதோடு சங்கைக்குரிய சனம் ஆண்டவர் மேற்றிராணியவர்களையும் கண்டு தெரிசிக்கலாமென்பது திண்ணம். ஆகையால் புண்ய பாக்யவான் பாக்யவதிகாள்! ஆரோக்கிய மாதாவின் பரிபூரண ஆசீர்வாதப்பலன் பெற்று மங்களமாய் வாழ்ந்திருக்க நீங்கள் ஒவ்வொருவரும் விஜயம் செய்யும்படியாக தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் உங்கள் மனதை சந்தோஷிக்கச்செய்யுமாறு நாடார்குல கழுதர்கள் பக்திரஸம் பொருந்திய நாடகமும் நடத்திக் காட்டுவார்களென்பது திண்ணம். மாமரியே! மக்களுக்காக ஜெகஸ்லவை மன்றாடும்.

கே. எம். தேவசகாயநாடார்,
கொளும்பு.

### இலங்கையில் மோசடி,

மதுரை ஜில்லா கண்டமனூரைச் சேர்ந்த புதுவயலிலுள்ள ஒரு முகமதியப் பையன் இரண்டு வருடமாய் இலங்கை வல்லாக்துறையிலுள்ள ஒரு கடையில் சம்பளத்திற்கு அமர்ந்திருந்தான். சமீபத்தில் திருப்பி ஊருக்குப் போகும்போது கடையில் ரூ 300 வரை பொய்க்கணக்கெழுதி எடுத்துச் சென்றுவிட்டான். முதலாளிகளை இவ்விதமாக ஏமாற்றிச் செல்வது பெரும் நம்பிக்கை மோசமாகுமென காகவத்தை, ஸ்ரீமான் நா. அருபதது மூலம் நாடார் எழுதுகிறார்.

## அனுக்கிரக காலம்!

### அசட்டை செய்யாதிர்கள்.

இப்புவியின்கண் வாழும் ஜீவராசிகளெல்லாம் நாளுக்கு நாள் விர்த்தியாகவும், ஞானத்தில் சிறந்தோங்கி நன்மை பெறவும், சிருஷ்டிகரின் திருநாமம் மகிமைப்படவும் தக்கதாக உலகியல் நடைபெற வேண்டுமென்பது சாஸ்திரிய சம்மதமும் பகவன் கட்டளையுமாகும்.

அவற்றிலும், மானிட தேகிகளுக்கு விசேஷித்த ஞானத்தை யளித்திருக்கின்றார். இதுவ்வாறிருக்க, மானிடர்களிலனேகர் சிருஷ்டி நோக்கிற்கிணைய நடவாது தம்சம் இஷ்ட வழிசென்று அனுவசியமான விஷயங்களில் தலைப்படுகிறவர்களாயிருக்கின்றனர். எப்படியெனில்:— கல்வியில் சிறந்த புத்திமான்களாகிய கனவான்கள் உலகத்திற்கனுகூலமான விஷயங்களைச் செய்ய யோசிக்கின், அது அப்படியல்ல, இப்படி எனவும், "தாங்கள் பிடித்த முயலுக்கு கால்கள் மூன்றே" எனவும் சாதித்து நற்கைகர்பாதிகளை வியர்த்தப்படுத்துகின்றனர்.

இவ்வாறுனால் மானிட சமூகம் எவ்வாறு முன்னேறுவது? நம் தென் திருநெல்வேலியில் தற்சமயம் இறைவனருளால் புதிது புதிதாக ரெயில் பாதைகளும், ரோடுகளும், கால் வரத்துகளும் உதயமாகிக் கொண்டு வருகின்றன. இன்னும் உதயமாகக் காத்திருக்கின்றன.

இவ்வித நன்மைகளைப் பெறுவதற்கு இக்காலமே நற்காலமெனக் கண்ட பல பரோபகாரிகள் தற்சமயம் நாசரேத்து ரோடிலிருந்தொரு பிரிவு மெய்ஞ்ஞானபுரத்திற்குப்போடவேண்டியதவசியமெனக்கண்டு தங்களினுதவியால் ரோடு வேலைகளை வெகு துரிதமாக நடத்திவர, அங்குற்ற நம் சகோதர இரு பட்சத்தார்களின் வில்லங்கத்தினால் "வாய்த் தவிடும் போய் அடுப்பு நெருப்பு மவிந்தது" போலாகி "கைச் செட்டினது வாய்க் கெட்டாமல்" ரோடு வேலை நிறுத்தப்பட்டதைக் கவனிக்கும்போது பெரிதும் விசனிக்கத்தக்கதாயிருக்கின்றது. இவ்வித சந்தர்ப்பங்களுக்கூடே கால் வரத்துகளுக்கும் ஆகின்றேரும். ரோடு வேலைக்கே இவ்வாறாகியிருக்க இனிமேல் தென் நாட்டை செழிப் பாக்குவதெப்படியோ! இன்னும் எவ்வாறு தான் கால் வரத்துகளை ஏற்படுத்துவதோ !!

கல்லுவிளைப் பாதையாகப் போடுவதேயானால் சகலருக்கும் பொதுவாக வியாபார சாதனங்களுக்குத் தோதாகவும் கால் நடைப் பிரயாணிகள் யாதொரு அச்சமின்றி பிரயாணம் செய்யவும் ஏதுகரமாகயிருப்பதுடன் மெய்ஞ்ஞானபுரத்திற்கேபோய்ச் சேருவதால் திருப்திகரமான மார்க்கமாகத் தோன்றுகின்றது. "எத்தால் வாழலாம்? ஒத்தால் வாழலாம்". ஆகையால கனதனவான்களாகிய யாபேர்களும் ஒற்றுமையைக் கடைப்பிடித்தொழுகினவர்களாய் ரோடை கல்லுவிளை மார்க்கமாகவே போட முயற்சிக்கும்படி எவ இறைவன் அருளுமாறு இறைஞ்சுவோமாக.

ஞா. பா. ஞ. ஏசுதாச நாடார்,
திம்மலகுறிய

## நிறைவு விழா.

### திருத்தங்கல் க்ஷத்திரிய நாடார் சமரச சன்மார்க்கசபை

ஷை சங்கத்தின் ஆறுவது ஆண்டு நிறைவுவிழா கடந்த ஜூலை மாதம் பதினாறும் தேதி சனிக்கிழமையன்று மாலை 5-மணிக்கு ஷையூர் செல்வ விநாயகர் கோவிலின் முன் பாரிசத்தில் அமைக்கப்பட்டிருந்த சிங்காரக் கொட்டகையில் நமது தாய்ச்சங்கத்தின் உபதலைவரும் சென்னை சட்டசபையின் அங்கத்தினரும் குலாபிமானமும் தேசாபிமானமும் ஒருங்கே ததும்பும் பெருந்தகையாளரும் ஆகிய பட்டிவீரன்பட்டி ஸ்ரீமான் ஊ. பு. அ. சௌந்தரபாண்டியநாடார் அவர்களின் கௌரவ அக்கிராசனாதிபத்தியத்தின் கீழ் சிறப்பாக நடைபெற்றது.

குறித்த காலத்தில் மந்திரி பேட்டிக்காகச் சென்று கொண்டிருந்த தமது ஆப்த நண்பரொருவர் தம்மை வந்து கண்டு கொள்ளும்படியாகத் தந்திமூலம் செய்தி அறிவித்திருந்தும் அதையும் பொருட்படுத்தாமல் கனம் சௌந்தரபூபரவர்கள், தமது உற்றாரும் உறவினரும் ஆகிய சுற்றுகும் சமது நிறைகுணத்திற்கேற்ப மாணிக்கம் என்ற பெயரைத்தாங்கியவர்களுமாகிய ஒரு உத்தமரோடு சிவகாசி இரயில்வே ஸ்டேஷனில் வந்து இறங்கினர்.

உறவின்முறை நாடார்கள் அவ்னவரை மோட்டார் விமானத்தில் ஏற்றி மாலைசூடி பேண்டு வாத்தியத்துடன் ஊர்வலம் கொண்டு சென்றனர். பின்பு விருந்து முடிக்க கொட்டகைக்குச் சென்று போட்டோ (புகைப் படம்) பிடித்தானதும், சுமார் 5-மணிக்கு மகாநாடு ஆரம்பமானது. கடவுள் வாழ்த்துக்கூறியதும் திருவாளர் பாவநாசநாடாரவர்கள் ஷை சங்கத்தாரின் சார்பாக கனம் அக்கிராசனாதிபதியவர்களுக்கு உபசாரப்பத்திரமொன்று வாசித்துச் சமர்ப்பித்தனர்.

பின்பு அவையடக்கமாக கௌரவ அக்கிராசனாதிபதியவர்கள் மகமை முதலிய நமது குல முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமான பல விஷயங்களை யெடுத்துப் புகட்டியதும் உபந்நியாசங்கள் பல நடந்தேறின. ஸ்ரீமான்களான மீ. அ. மு. தங்கமுத்துப்பாண்டியன், சி. கு. ச. சுப்பையா, ச. மு. மாரியப்பநாடார், மா. ஜயாத்துரைராஜ், அ. ச. பாவநாசநாடார்முதலியோர் முறையே பரோபகாரம், கல்வியின் பெருமை, வேளாளன் தொழில், தமிழும் தமிழர் உரிமையும், நம்தனித் தமிழ் தளர் நிலைபடைந்ததேன்? என்னும் விஷயங்களைப்பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினர். அவ்வுபந்நியாசங்களின் நடுவண் சில தீர்மானங்கள் நிறைவேறின. பின்பு கனம் அக்கிராசனாதிபதியவர்கள் முடிவுரை கூறியதும் சபை சுமார் 7-30 மணிக்கு இனிது கலைந்தது. மறுநாள் மதுரையில் நடக்கவிருந்த ஒரு மகாநாட்டிற்குத் தலைமை வகிக்க வேண்டி தந்தியொன்று கிடைத்திருந்ததால் கனம் சௌந்தரபாண்டியநாடாரவர்கள் பிணிவாய்ப்பட்டுச் சிறிது வருந்திய தமது தோழரையும் இருத்திவிட்டு அவசரமாக மதுரை சென்றுவிட்டனர்.

அ. ச. பாவநாசம்.

## அசரீரி வாக்கு.

ஓ! நாடார்குல நவமணிகளே !

(1) நீங்கள் எக்காலமும் க்ஷேமமாக வாழ விரும்பினால் உங்கள் நாடார் ஜன சமூகத்தின் மீது அபிமானமும், அன்பும் செலுத்த வேண்டும்.

(2) உங்கள் வகுப்பினரெவரும் முன்வந்து அபேக்ஷிக்கும் பொது ஸ்தாபனங்களுக்கு நீங்கள் உள்ளன்போடு ஒத்தாசை செய்ய வேண்டும்.

(3) நீங்கள் எந்த நிமிஷத்திலும் சத்தியமாக, உறுதியாக, சுயநலங்கருதியேனும், சூழ்ச்சிக் கிசைந்தேனும் உங்கள் ஜாதியின் கௌரவத்திற்குத் துரோகம் செய்யாதிருப்பீர்களாக.

## அரியவுரைகள்.

உடல் தூய்மையும் அறிவு வன்மையும் பெறுவதால் மட்டும் ஒருவன் பிராமண தர்மத்தைக் காப்பாற்றியவனாகான்.

—சாரளாதேவி சௌத்ராணி

அசுத்தமானவனையும் ஆலிங்கனம் செய்துகொள்ளும் இதயமும், அத்தகையவனைத் தூய்மைப் படுத்தும் விருப்பமும், அநாகரீகர்களையும் நாகரீகப்படுத்தி உடல் தூய்மையிலும் ஒழுக்கத்திலும் அறிவிலும் மேம்பாடையச் செய்யும் முயற்சியும் எவனிடம் உண்டோ அவனே பிராமணன்.

—ஷையார்

சிறிது காலம் தேசத்திற்குப் பெரும் மகிமையை அளித்துவந்த புத்தமதக் கொள்கைகள் பின்னர் தேசத்தைப் பெரும் இருளில் ஆழ்த்திவிட்டன. அதாவது கிரகஸ்த தர்மத்தையே முக்கிய லட்சியமாய்க் கொண்ட பிராமணீயம் சிலவிய இடத்தில் சந்நியாச தர்மம் குடிகொண்டதனால் சந்ததி விர்த்திசெய்து வந்தவர்கள் மிகவும் சாதாரண மனிதர்களாயிருந்தனர்.

—ஷையார்

ஒரு நாட்டிலுள்ள அறிவாளிகள் அனைவரும் துறவிகளாய்விடின் அந்நாட்டிலிருந்து லக்ஷ்மி விலகுவள்.

—ஷையார்

பண்டைக்காலத்தேபோல் பிராமணத்துவம் என்பது தபசினால், புலனடக்கத்தினால் பெறக்கூடிய பேருகக் கருதப்படவேண்டுமே யன்றி பிறப்பினால் பிராமணனாகக் கூடுமென்னும் கொள்கை நீங்கவேண்டும்.

—ஷையார்

ஒருவன் தன் கடமையை மரியாதையாக ஆற்றிவரும்வரை அவன் செல்வனாயினும் ஏழையாயினும் கொல்லனாயினும் பாய் முடைபவனாயினும் கோடீஸ்வரனாயினும் ஒன்றுதான். ஒருவனுடைய குணங்களுக்கும் செயல்களுக்கு மட்டுமேபொதுச்சபைகளிலோ பொது நிர்வாகங்களிலோ மதிப்போ அவமதிப்போ உண்டேயல்லாது ஒருவனிடம் ஒருபொருள் உள்ளதற்காகவோ இல்லாதற்காகவோ அவனுக்கு மரியாதை அவமரியாதையில்லை.

—டி. டி. பென்பி

## ஓர் வதந்தி.

வடக்கன்குளம் நாடார்குல மக்களால் ஏறக்குறைய 250 வருடங்களுக்கு முன் கட்டப்பட்டிருக்கும் அர்ச் வியாகப்பர்கோவில் தற்சமயம் பாடசாலையாக உபயோகப்பட்டு வருகிறது. அதன் முன் பக்கக்கல் மண்டபத்தில் இது நாடார்குல தியாகிகளால் கன்கொடையளிக்கப்பட்டிருப்பதாக ஆங்கிருக்கும் சித்திர வேலைப்பாடமைந்த கற்றூண்களில் எழுதப்பட்டிருப்பதானது இற்றைவரை ஞாபகச்சின்னமாக அம்மண்டபத்தில் தோற்றுகிறது.

சிலாசாசனங்களாக நாடார்கள் பெயரை எழுதி வைத்திருப்பதை அழிக்க வேண்டுமென ஒரு சூழ்ச்சிகொண்டு நாடார்குலத்தவர் பேரில் துவேஷமுள்ள இதரர்களின் ஆலோசனையின் பேராலோ அல்லது தெரியாமலோ நம் சுதேச மேற்றிராசன அதிகாரிகள் அம்மண்டபத்தை அடியோடழித்து அவ்விடத்தில் ஹார்து கெபியொன்றமைக்க வேண்டுமெனபோக்குஒன்றை புதிதாக ஏற்படுத்துவதாக ஓர் பெரும் வதந்தியுலாவுகிறதையறிந்து மிகவும் விசனமடைகிறோம்.

மேற்கண்ட விஷயம் நடைபெறுவதானது மெய்யாயிருப்பின் கத்தோலிக் நாடார் சகலரும் இவ்வித சூழ்ச்சி நடைபெறவிடாது தடை செய்வார்களென நம்புகிறோம்.

ஐ. எஸ். ஏ. சத்தியநாதன்நாடார்,
கொளும்பு.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## விடுமுறை.

நம் மித்திரன் பதிப்பாகி வரும் அச்சாபீஸ் வருஷாந்திரக் கணக்கு அடுத்த வாரம் முடிக்கவிருப்பதால் அதன் காரணமாயேற்படும் தாமதத்தின் பொருட்டு வழக்கம்போல் அடுத்த வாரச் சஞ்சிகையை நிறுத்தஞ் செய்து 15—8—27--ல் வெளியீடு செய்யலாகுமென்பதைச் சந்தா நேயர்கட்கறிவித்துக் கொள்கிறோம்.

பத்திராதிபர்.

---

**நாடார்குலமித்திரன்**

பிரபவ ஞு ஆடி மீ ௰௭ உ

## அடைப்பும், உடைப்பும்.

உலகத்திலே எந்தத் தேசத்திற்காவது, எந்த வகுப்புக்காவது கால இயற்கையால் சிறிது முன்னேற்றத்திற்கு வழி திறக்கப்பட்டு விட்டால், அவ்வழி இயற்கையில் திறக்கப்பட்டதெனக் கொள்ளாது தங்களால் திறக்கப்பட்டதென்றும், தங்களுக்கே அவ்வழி சொந்தமானதென்றும், மற்றியாவரும் அவ்வழியாக வரக்கூடாதென்றும் அடைப்பதும், மற்றவர்கள் சர்வசாதாரணமான வழி சகலருக்கும் சமத்துவமானதென்று அடைக்கவிடாமலதை உடைப்பதும் இதனால் கொள்ளையும், கொலையும், அகோர யுத்தமும், சமாதானக் குறைவும் ஏற்படுவது சகஜமாயிருந்து வருகின்றன.

நம் பாரத பூமியில் பிராமணர்களும், க்ஷத்திரியர்களும் பூர்வ காலந்தொட்டு தேசத்திற்கு எஜமான்களாயிருந்து மற்றவர்களைத் தாழ்த்தியே வந்திருக்கிறார்கள். மற்றவர்களை தங்களுக்காயுதங்களாக வைத்துக் கொண்டு ஒருவரை யொருவர் வெல்ல வழி தேடியுமிருக்கிறார்கள். எப்படியும் பிராமணனே வென்றுவிட்டான் என்றாலும், புத்தர் கால முதற்கொண்டு பிராமணீயம் தொலைந்து வந்திருக்கிறதாயினும் இந்தியாவில் பூர்வீக அரசர்கள் நிலையற்ற பிறகு அந்நியர் மாறி மாறி வந்து கொண்டிருந்தமையால் பிராமணீயத்தின் உயிர் செத்துப்போகாமல் மீண்டும் சர்வாதிக்க வழியில் சகலரையும் நுழையவிடாமல் அடைப்பு ஏற்பட்டு, மகாத்மா காந்தியால் சிறிது உடைக்கப்பட்டு வந்தது. திரு. ஸ்ரீநிவாசய்யங்காரால் பின் அடைக்கப்பட்டு வருகிறது. திரு. இராமசாமி நாயக்கரவர்களால் அது வெகுபலமாக உடைக்கப்பட்டும் வருகிறது. இவ்வாறு அடைப்பும், உடைப்பும் அடிக்கடி ஏற்பட்டு மக்கள் மனதை வருத்திக்கொண்டிருக்கிறது. பணக்காரர்களும், படித்தவர்களும் அடைப்புடைப்பு வேலையிலிறங்கவே ஏழை மக்கள் பாடுதான் மிகுந்த கஷ்டமாயிருந்து வருகிறது. ஆயினும் ஐயங்கார் அடைப்பை ஒரு கை பார்த்து விடுவோமென்று தான் கோவையில் ஒன்றுகூடி உடைப்பதென்று தீர்மானித்துக் கொண்டார்கள்.

முன்னொரு காலத்தில் மதுரை வைகையில் பலமான உடைப்பெடுத்து நகரத்தையே அழிக்கவிருக்குந்தருவாயில் பரமசிவன் உடைப்பை அடைப்பதற்காக காதனற்ற பிட்டு வாணிச்சிக்கிரங்கி பிட்டுக்கு மண் சுமந்தாரென்றும், அவர் சுமந்தது சரியில்லையென்று பாண்டிய ராஜன் அவரைப் பிரம்பாலடித்தாரென்றும் திருவிளையாடற் புராணத்தில் ஒரு கதையுண்டு. அதுபோல் பிராமணர்கள் அடைத்த அடைப்பு பிராமணரல்லாதாரால் சிறிது உடைபடவே இதனால் எல்லாம் முழுகிப்போமோவென்று பயந்து லார்டு கோஷனுங்கூட அடைப்படைக்க மண் சுமக்கின்றார். அது சரியில்லையென்றும், அவராட்சி நன்றாயில்லையென்றும் பிராமணரல்லாதார் கண்டனத் தீர்மானப் பிரம்பாலடிக்கின்றார்கள். அவ்வடி நம் முதுகிலும் பட்டதுபோல் ஸர். ஸி. பி. ஐயர் முதுகை நெளிந்து முகத்தைச் சுழிக்கிறார். இவ்வடைப்பும், உடைப்பும் ஒன்றோடொன்று மோதண்டு ஏழை மக்களுக்கு இன்னும் என்னென்ன கஷ்டங்களை விளைவிக்கின்றனவோ தெரியவில்லை. ஐயங்கார் அடைப்பைப் பற்றி யாரும் வருத்தப்படமாட்டார்கள்; பொருட்படுத்தவுமாட்டார்கள். வால் பிடிக்கும் ஆசாமிகளையும், பிட்டுக்கு மண் சுமக்கிற சாமிகளையும்பற்றித்தான் சிறிது கவலை ஏற்படக் கூடும். ஆனால் ஒவ்வொருவரும் தைரிய லட்சுமியைச் சார்ந்துகொண்டால் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை. அவளுடைய சேர்க்கை கிடைக்கவும் வேண்டும். திருவாளர் ஓ. கந்தசாமி செட்டியாரவர்கள் பிராமணரல்லாதார் சமூக முன்னேற்றத்தில் மிகவும் சிரத்தையுடையவரென்பது பிரசித்தம். அப்படிக்கிருந்தும் மதுராந்தக நாடகத்தில் அவர் நாடகத் தலைவராகவந்து நடித்த நடிப்பிலிருந்து ஐயங்கார் மீது அந்தரங்கத்தில் மிகுந்த காதலுள்ளவராயிருந்து வந்திருக்கிறாரென்பது வெளிப்பட்டுவிட்டது. பிருந்தாவனத்தில் கோபிகா ஸ்திரீகளெல்லாம் கிருஷ்ண லீலையில் பரம பக்தர்களாய் வயப்பட்டு தங்களையே மறந்துவிட்டதுபோல், மதுராந்தக மகாநாடே ஐயங்கார் புன் சிரிப்பில் மயங்கி ஐயங்கார் பக்தர்களாய் என்றுமிருக்கத் தீர்மானித்துவிட்டார்கள். ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள காங்கிரஸ் கதவுகளையும் பலமாக அடைக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். இதனால் ஐயங்கார் அடைப்புச் சிறிது பலப்படக்கூடும். ஆனால் கோவை மகாநாட்டில் குலாவிய இன்பம் பலன் தராமற் போகாது. சமூக சீர்திருத்தத்திலும் அரசியலிலும் நாம் முன்னேற்றமடைவதற்கு வழி திறக்கப்பட்டுவிட்டதென்று காஜித்த ஸ்ரீமான்கள் கலியாண சுந்தர முதலியார், டாக்டர் வரதராஜுலுநாயுடு ஆகியவர்கள், சமூக சீர்திருத்த வழியில் முன்னிற்கும் திரு ஈ. வி. இராமசாமி நாயக்கரவர்களுக்கும் அரசியலில் முன்னிற்கும் கனம் பனகால் ராஜா, ஸ்ரீமான் இராமசாமி முதலியாரவர்களுக்கும் வெற்றி கிடைக்க வேலை செய்ய முன் வருவார்களா? கோவை மகாநாட்டுக்குப் பிறகு யாது செய்தார்கள்; செய்கிறார்கள்? வேதாளம் பழயபடி முருக்க மரத்திலேறி விட்டதென்ற ஸ்ரீமான் நாயக்கர் வருத்தத்திற்குப் பொருத்தமான பதில் விடுத்தார்களா? இல்லை. இதுவரையுமில்லை. ஏன்? ஐயங்காருக்கு அச்சமா, தாட்சண்யமா? இதுவரையும் தயவு தாட்சண்யம் பார்த்தது போதும். இனியொருகணமேனும் தாமதிக்கலாகாது. ஐயங்கார் படைகள் வட மாகாணத்தைவிட்டு வெளியேறி வருகிறது. சென்னையை நெருங்கிவிட்டது. முற்றுகை போட விட்டுவிடாமல் ஒற்றுமையுடன் ஐயங்கார் அடைப்புகளை உடைத்தெறிய வேண்டும். பிராமணரல்லாத பெரிய சமூகத்திற்கு இதுவொரு சோதனை காலமாக வந்திருக்கிறதென்பதை மனதிற்கொண்டு எல்லோரும் ஒன்றுகூட வேண்டும். கிராமாந்திரச் சாதாரண ஜனங்களைத் தட்டியெழுப்பினால் ஐயங்கார் எதிர்ப்புக்குக் காலாட் படைகளாக உபயோகிக்க ஏதுகரமாகும். ஆகையால் ஸ்ரீமான் இராமசாமி நாயக்கரவர்களின் சுயமரியாதைப் பிரசாரத்துக்கு பிராமணரல்லாத பணக்காரர்களும், படித்தவர்களும் திரிகரண சுத்தியுடன் வேலை செய்ய முன் வருவார்களாக. அப்படியானால் ஐயங்காரின் எவ்வடைப்புகளையும் எளிதில் உடைத்துவிடலாம். ஐயங்கார் பொய்ப்பூட்டுகளெல்லாம் உயர் திருவாளர் ஆர். கே. ஷண்முகஞ் செட்டியாரவர்களின் மெய்யுணர்வால் உடைக்கப்பட்டு வந்திருக்கின்றன. லார்டு கோஷனல்ல, எந்த ராஜனல்ல, யார் வந்து நம்முடைப்புக்கு மண் சுமந்தாலும் அடைக்க முடியாமற் செய்ய நமக்குச் சக்தியுண்டென்பதை நாம் நிரூபிக்கத் தவறிவிடக்கூடாது.

---

## குறிப்பு.

### வாரக் கொண்டாட்டம்.

நமது சமுகத்திடை ஜன சமூக எழுச்சியும், ஒற்றுமை யுணர்ச்சியும், குடிகொண்டிருக்க வோர் அறிவுறுத்தலாகவும் நமது மகாஜன சங்கத்தின் சிறப்பை நாமொவ்வொருவரும் கொண்டாடி அதனபிவிருத்திக்குற்ற சந்தா, நன்கொடை, தலைக்கட்டு வரி ஆகிய பண வருவாயை வசூலித்தற்குதவியாகவும் ஆரம்பிக்கப்பட்ட வாரக் கொண்டாட்டம் கடந்த ஈராண்டுகளாக ஆவணி மாதம் முதல் வாரத்தில் நம்மவர்கள் மத்தியில் ஒவ்வொரு ஊரிலும் சிறப்பாய் ஆங்காங்குள்ள அபிமானிகளால் நடத்திவைக்கப்பட்டு வந்தது. அதனாலான பயனையும் நாம் ஒருவாறு பெற்றோம் என்பதில் என்ன தடை? இக்கொண்டாட்டம் ஆரம்பிக்கப்பட்டதின் முழுக் கொள்கையுடனும் அனுஷ்டிக்கப்பட்டால் எதிர்பார்த்த முழு அனுகூலமும் கிடையாமற்போகா. ஆகவே அடுத்துவரும் ஆவணி மீ முதல் வாரத்திலும் நாடார்கள் பரவியுள்ள ஒவ்வொரு கிராமத்திலும், நகரத்திலும் கொண்டாடி சமூக நலனை நாடுமாறு வேண்டுகின்றோம். இது விஷயமாய் மதுரை மகாஜன சங்கத்தார் இதுவரையாதொரு அறிக்கையும் வெளியிடவில்லை யென்றாலும் கூடிய சீக்கிரத்தில் அறிக்கை பிறப்பித்து அனுப்புவார்கள் என்று நம்புகிறோம்.

---

## திக்குவிஷயம்.

ஒரு அங்குலத்தில் 1000த்தில் 18 மடங்கு வீதம் ஒரு காலைக்கு மனிதர்களின் மயிர் வளர்கிறதாம்.

---

அமெரிக்காவில் 9 லட்சம் கிராமபோன் பெட்டிகள் உபயோகத்திலிருக்கின்றனவாம். மோட்டார் வாகனம் 12 லட்சம்.

---

ஒரு அடி நீளமும் 4 அங்குலம் பருமனுமுள்ள சுருட்டுகள் இங்கிலாந்தில் மலிவாம். சுருட்டொன்று விலை பவுன் மூன்று.

---

500 அடி உயரத்திலிருந்து கீழே விழும் ஒரு மனிதனின் நிலை அதோகதியாயிருக்க, ஒரு சுண்டெலி அதே உயரத்திலிருந்து விழுந்தால் குதித்தெழுந்தோடுமாம்.

---

நீர் யானைகளின் தோல் இரண்டு அங்குலம் கனம் வாய்ந்ததாம்.

---

பூகம்பங் காட்டும் செடி கூபாநாட்டிலிருக்கிறதாம். அச்செடியின் நிறம் மாறினால் பூகம்பம் கட்டாயம் உண்டாகுமென அறியவேண்டுமாம்.

---

பெரிய கட்டடங்கள் பெருங்காற்றுக்கு அசைவதையும் கண் கொண்டு பார்க்க ஏதுகரமான கண்ணாடிகள் மிஸ்டர் ஜே. இ. பார்னெட் என்பவரால் கண்டு பிடிக்கப் பெற்றிருக்கின்றன.

---

திருவாங்கூரிலுள்ள காடொன்றில் சாய்ந்த மரமொன்றுக்கு நெருப்புவைத்துச் செல்லவே அது காடு பூராவும் பற்றத்தொடங்கிவிட்டது. இதைக்கண்ட ஆங்குள்ள யானைகள் அருகிலோடும் நதியினின்றும் துதிக்கையால் தண்ணீர் கொண்டுவந்து நெருப்பை அணைத்தனவாம.

---

ருமேனியா தேசத்து அரசர் பெர்டினட் மன்னர் இறந்து விட்டது குறித்து இரண்டுவாரம் துக்கங் கொண்டாட சென்னை கவர்ன்மெண்டார் உத்தரவிட்டிருக்கின்றனர்.

---

பிராமணரல்லாதார் கோவைமகாநாட்டுத்தீர்மானத்தைப் பாராட்டியும் ஜஸ்டிஸ் கட்சி அங்கத்தினர்கள் காங்கிரஸில் வந்து சேரும்படி அழைத்தும் ஒரு தீர்மானம் ஆந்திர மாகாணக் காங்கிரஸ் கமிட்டி செய்திருக்கிறது.

---

சென்னையில் வாந்தி பேதி தலைகாட்டியிருக்கிறது. அதிகாரிகள் கவனமெடுத்து வருகிறார்கள்.

---

அகில இந்திய நூற்போர் சங்கத்தில் மகாத்மா காந்தியடிகள் வகித்து வந்த தலைமைப் பதவிக்கு அவரின் தேக அசௌக்கியங் காரணமாக சேத் ஜமன்லால் பஜாஜ் அவர்களை நியமித்திருக்கின்றனர்.

---

பிரிட்டிஷ் பார்லிமெண்டு இந்திய அங்கத்தினர் தோழர் சக்லத்வாலாவின் இரு புத்திரர்களும் மூன்று புத்திரிகளும் பாரஸி மதத்தில் சேர்ந்துவிட்டனராம். அவ்வைபவத்தன்று அவர்கள் கதராடையில் விளங்கினராம்.

---

சென்னை மாகாண முதல் மந்திரி ஆகஸ்டு மாத இரண்டாவது வாரத்தில் தம் கட்சிப் பிரசாரார்த்தமாக தென்னாடுநோக்கி வருகிறாராம்.

---

சென்னையை அடுத்த வேலாச்சேரியிலுள்ள வேடுவனொருவன் வேட்டைக்குச் சென்று திரும்புகாலில் வேட்டையாடிய பக்ஷிகளைச் சுடுவதற்கு நெருப்பு மூட்டினான். அருகில் வைத்திருந்த துப்பாக்கிக் குண்டுகளில் நெருப்புப் பொரி பறந்து விழவே குண்டு வெடித்து வேடனுக்கு வேட்டு வைத்துவிட்டது. அநேகமாய் உயர்தப்ப இயலாதெனச் சொல்லப்படுகிறது.

---

கல்கத்தா வைத்தியப் பாடசாலையிலுள்ள தலைமை குமஸ்தாவும் 3-வது குமஸ்தாவுமாகச் சேர்ந்து லக்ஷ ரூபாய் வரை மோசஞ்செய்து போலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# உலகியல்.

## மேனாட்டு நகர நாகரீகம்.

மகாத்மா காந்தியடிகள் நகரங்களின் தன்மைபற்றி பின் வருமாறு கூறுகிறார்:—

இந்நாட்டின் நாகரீகம், நகர நாகரீகம் அன்று. மேனாட்டின் நகர நாகரீகத்தை இந்நாட்டில் கொண்டுவந்து புகுத்தி விடலாமென்று உங்களில் யாரேனும் கனவு கண்டு கொண்டிருந்தால், அது இந்தத் தலை முறையில் அன்று, இன்னும் பல தலை முறைகளிலும் நடக்கும் காரியமல்ல வென்று அத்தகையோருக்கு எச்சரிக்கை செய்வேன். நமது தேசம் எத்தகையதென்று ஒரு கண நேரம் சிந்தித்துப் பாருங்கள். நூறல்ல, ஆயிரமல்ல, எழுலட்சம் கிராமங்கள் அடங்கியது. 1900 மைல் நீளமும் 1500 மைல் அகலமுமுள்ள இவ்விஸ்தாரமான தேசமெங்கும் மேற் சொன்ன கிராமங்கள் பரவிக்கிடக்கின்றன. இந்தியா அமெரிக்காவைப்போல் புதிதாக ஜனங்கள் சென்றுகுடி புகுந்த தேசமன்று. எவ்வளவோ நூற்றாண்டுகளாக நிலைபெற்றிருக்கும் பழக்கங்களையும், சம்பிரதாயங்களையும் ஒரு கணத்தில் மாற்றிவிட முடியாது. இந்நாட்டிலேயுள்ள கிராமங்களையெல்லாம் அழித்துவிட்டு நகர நாகரீகத்தை ஏற்படுத்தலாமென நீங்கள் எண்ணுவீர்களாயின், அது ஒரு நிபந்தனையினால்தான் முடியும். செங்கிஸ்கான் என்னும் கொடுங்கோலன் செய்ததாகச் சரித்திரக் கதைகளில் கூறப்படுவதுபோல் இரக்கமில்லாமல் கிராமவாசிகளைக் கொன்று குவிக்கக்கூடிய ஆயிரக்கணக்கான செங்கிஸ்கான்கள் வேண்டும். இதற்கு மாறாக, இந்நாட்டிலுள்ள கிராமங்கள் நிலைத்திருக்க நீங்கள் விரும்பினால்; மேனாட்டிலிருந்து வருபவற்றின் சக்கையைத் தள்ளி சாரத்தைமட்டும் ஏற்றுக்கொள்ள விரும்பினால், அப்போது இத்துறையில் உங்களுக்கு நிரம்ப வேலை இருக்கிறது.

ஃ ஃ ஃ

## புகழ்தற் குரியோர்.

ஸ்ரீ திரு வி. கல்யாணசுந்தரமுதலியாரவர்கள் உலகில் புகழ்தற்குரியவர் யாவரெனக் கூறுவதாவது:—

குணங்களை இரண்டு கூறாகப் பிரிக்கலாம். ஒன்று பெண்மைக் குணத்தொகுதி; மற்றொன்று ஆண்மைக் குணத்தொகுதி. பெண்மைக் குணங்களாவன:- அழகு அடக்கம் பொறுமை தியாகம் பரநலம் இரக்கம் வீரம் முதலியன. ஆண்மைக் குணங்களாவன:- காடு முரடு அவா பொறாமை தன்னலம் சீற்றம் முதலியன. ஆண்மகன் கரடும் முரடும் சுருளும் திரிவும் பிளவும் நிரம்பியபட்டைகள் போர்த்த வலிய மரம் போன்றவன். பெண்மகள் அக்கரடு முரடு முதலிய கொடுமைகளை ஒடுக்க, அம்மரத்தைச் சுற்றி, மணதுக்கினிய பசுமை வழங்கும் மெல்லிய பூங்கொடி போன்றவள். இக்குணமிலாப் பெண் பெண்ணாகாள். இக்குணமுள்ள ஆண்மகனும் பெண்மை பெற்றவனாகிறான். ஆண் வடிவில் பெண்மைக்குணம் பெற்ற மக்களே இதுகாறும் உலகில் அன்பர்களென்றும், பாவலர்களென்றும், அடியார்களென்றும், அறிஞர்களென்றும் வீரரென்றும் சொல்லப்பட்டு வருகிறார்கள். "ஆண் வடிவம் பெண்மைக் குணம்" என்பது கொண்டு அலி என்று எவருங் கருதலாகாது. அலிகள் ஆண் பெண் என்னும் இருபாலாரிலும் உண்டு. அவர்களைப்பற்றிய பேச்சே ஈண்டு வேண்டாம். அவர்கள் சபிக்கப்பட்டவர்கள். அக்கூட்டம் வேறு. ஆண் பிறவி தாங்கினோர் நல்வழியில் முயன்று பெண்மைக்குணம் பெற முயல்வாராக.

## அரசியலில் பாரமார்த்தீகமா?

டாக்டர் சுதீந்திரபோஸ் அவர்களின் அபிப்பிராயம்:—

சுயநலம் கருதாமல் எந்தநாட்டினரும் இருக்கிறார்கள் என்றால் அது வெறுங் கட்டுக்கதைதான். அரசியல் எல்லாம் வியாபார தோரணையில் தான் நடக்கிறது. அதில் தர்ம நியாயம் பார்த்துக்கொண்டிருந்தால் நடக்காது. நான் 20-வருஷமாய் ஐரோப்பா, அமெரிக்கா போன்ற கிறிஸ்தவ நாடுகள் என்று சொல்லிக்கொள்ளும் தேசங்களில் வசித்து வருகிறேன். இந்த பாரமார்த்திக மடமைக்கெல்லாம் அரசியலில் வழியில்லை. ஏகாதிபத்திய ஆசையும், பிறநாடுகளில் குடியேறுவதும், படைகளை திரட்டுவதும், வலிமையற்ற ஜனங்கள் மீது குதிரையேறிக் கொள்ளை கொள்வதும், இவைகளெல்லாம் ஒளிவு மறைவு இல்லாமல் இந்த ஐரோப்பிய அமெரிக்க நாடுகள் போட்டி போடுகின்றன.

இந்தியாவின் முன்னேற்றத்தைக் கருதும் தலைவர்கள் இந்த உண்மைகளை அறியவேண்டும். பிற நாடுகளை நாம் துன்புறுத்த வேண்டுமென்பதில்லை. ஆனால் நாம் என்ன செய்யக்கூடும் என்பதைப்பற்றி அவைகள் சிந்திக்கும்படி நமது கட்டுப்பாட்டினாலும், ஒற்றுமையினாலும், ஆண்மையினாலும் செய்து விடவேண்டும். ஊக்கத்துடனும், தீரத்துடனும் உழைத்தால் இந்தியா சிறப்புறும் என்பதில் ஐயமில்லை. வீண் புரட்டுகளுக்கு நாம் இனி இடங்கொடுக்க மாட்டோம் என்று நிரூபித்து விடுவோம். இந்தியாவின் பழைய பெருமைகளும், சரித்திரமும் ஒரு பக்கம் இருக்க, எதிர்காலத்திலும் சிறப்புற்று வாழாமல் நம்மால் இருந்துவிடப் போகிறதில்லை. இந்த நம்பிக்கையுடன் உழைக்க முன்வந்து நமது நாட்டிற்கு மகிமை சூட்டுவோமாக.

ஃ ஃ ஃ

## ஒற்றுமை நாட்டம்.

மதுரையில் 25—7-27-ல் ஸ்ரீமான் ஜார்ஜ்ஜோசப் அவர்களின் தலைமையின் கீழ் பிராமண—பிராமணரல்லாதார் சமரஸக்கூட்டமொன்று 19 முக்கியஸ்தர்கள் அடங்கலாகக்கூடியது. அவ்வமயம் பிராமணர்களின் சார்பாக சமூகம் மதாச்சாரம் பொருளாதாரம் ஆகிய துறைகளில் பிராமணர் பிறருக்கு நீதி காட்டவில்லையெனப் புகல்வது சரியன்றென்றும், எங்கோ தனிப்பட்ட பேர்வழிகள் நடந்து கொள்வதை வியாஜமாகக்கொண்டு ஒரு சமூகத்தையே பழிசுமத்துவது கூடாதென்றும், பிராமணர்கள் பெரும் அநீதி செலுத்துகிறார்கள் என்று சொல்லிக்கொள்ளும் பிராமணரல்லாதாரே தங்களுக்குள்ளும் பாகுபாடு காட்டிவருகின்றனரென்றும், சமூகப் பிரிவு பல நூற்றாண்டுகளாக வளர்ந்தோங்கி இருந்தது சமீபகாலமாய்த்தான் இச்சச்சரவுகள் கிளம்பியிருக்கின்றன வென்றும் வாதிக்கப்பட்டது.

பிராமணரல்லாதார் சார்பாக, பிராமணர்கள் மத சம்பந்தமான கட்டுப்பாடுகளால் பிராமணரல்லாதாரைநெகிழவிடாமல் கட்டி, கல்வி, அறிவு, ஒழுக்கம் ஆகிய வழிகளை மூடிவிட்டனரென்றும், அவ்விதமே உத்தியோகப் பதவிகளையும் தற்காலத்தில் தங்கள் ஏகபோகச் சொத்தாகக் கருதிவிட்டார்களென்றும், ஆகவே மதக் கட்டினின்றும் வெளிப்படவே தாங்கள் முயற்சிப்பதாகவும் வாதிக்கப்பட்டது.

இறுதியாக இருசமூகத்தாரும் ஒற்றுணர்ச்சியுடன் ஒருவர்க்கொருவர் பேதமின்றி வாழ்ந்தாலன்றி இப்பிணக்கு விலகுமென்று ஒப்புக் கொள்ளப்பட்டதாம்.

## மதுரை முனிசிபல் எலெக்ஷன்.

### நாடார் மஹாஜனங்களுக்கு வேண்டுகோள்.

மதுரை முனிசிபாலிட்டி 14-வது வார்டு கௌன்சில் ஸ்தானம் ஒன்று சமீபத்தில் காலியாவதாகத் தெரிகிறது. ஷை வார்டில் நாடார்களுக்கு விசேஷ செல்வாக்குண்டு; சிறந்த வியாபாரமுண்டு; ஏராளமான வரியும் கொடுக்கிறார்கள். இதர செல்வாக்குள்ள வகுப்பினர்களின் ஆதரவும், அவ்வார்டு மொத்த ஓட்டுகளில் பேர் பாதியும் நாடார்களுக்கு இருப்பதாய் அறிகிறோம். இவ்விதம் விசேஷ அனுகூலங்களும், சந்தர்ப்பங்களும், ஆதரவுகளும் கிடைத்திருப்பதால் ஏற்ற காலத்தை இழந்துவிடாமல் ஷை காலியாகும் ஸ்தானத்துக்கு நாடார் ஒருவரை அபேக்ஷகராக நிறுத்தி ஜெயக் கொடி நாட்டி நம் ஜாதியின் கௌரவத்தைக் காப்பாற்றி முன்னேற்றமடையும்படி வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை முனிசிபாலிட்டியில் ஒரு வருஷமாவது நாடார் பிரதிநிதிகளிருக்கிறார்களென்றால் அந்தக் கௌரவம் நம் ஜாதிக்கு என்பதை மறந்துவிடக்கூடாது. ஒரு ஸ்தானம் போதுமென்று நினைப்போமானால் அது நீண்ட காலம் நிலைத்திருக்குமென்று யாராலும் கூற முடியாது. ஒரு சந்தர்ப்பம் கிடைக்கும் நேரத்தில் அதை அடைய முயற்சி செய்யாமலிருப்பதும், அதை வேறு யாரையேனும் அடைய எண்ணம் கொண்டு ஆதரவளிப்பதும், நம் ஜாதியின் கௌரவத்திற்கும், க்ஷத்திரிய கருமத்துக்கும் பொருத்தமற்ற காரியமெனக்கருதுகிறேன். ஆனதால்காலியாகும்கௌன்சில் ஸ்தானத்தில் ஓர் நாடாரை அமரச் செய்வதில் கொஞ்சமும் பின் வாங்க மாட்டார்களென்பது எனது திடமான முடிவு. அதை காரியத்தில் ஒற்றுமையுடன் செய்து காட்டி நாடார் உலகத்தை விசேஷ புகழொடு பிரகாசிக்கச் செய்வார்களாக. ஒற்றுமையே பலம்! சத்தியமே ஜெயம்!! என்னும் மந்திர உபதேசத்தை மறந்துவிடாமலிருக்கப் பிரார்த்திக்கிறேன்.

குல நலப்பிரியன்,

அருப்புக்கோட்டை.

## பெண்மக்கள் நிலை.

ஸ்ரீமதி ருக்மணி அருண்டேல் அம்மாள் அபிப்பிராயம்:—

இந்திய நாட்டில் மாதர்கள் தற்பொழுது அதிக சுதந்திரம் பெற்று வருவதோடு பொது விஷயங்களிலும் அதிகமாகக் கலந்துகொள்ளுகின்றனர். மேனாட்டு மாதர்கட்குச் சரீர சம்பந்தமான சுதந்திரங்கள் அதிகமாயிருக்கின்றன. சுதந்திரமென்பது ஆடவர்களைப்போல் தாமும் ஆகிவிடுவது தானென அவர்கள் எண்ணுகின்றனரேயன்றி சுதந்திரத்தின் உண்மைத் தத்துவத்தை அவர்கள் உணருவதில்லை. நம் நாட்டுப் பெண்மக்கள் அடையும் சுதந்திரம் ஆன்ம உணர்ச்சி பற்றியதாகும். இந்திய நாட்டில் ஸ்திரீகள் அடிமைகளாகவே இருக்கின்றனர். எனவே ஒருக்கால் இந்தியா சுயராஜ்யம் பெற்று விட்டபோதிலும் இந்தியரில் பாதித்தொகையினரான மாதர்களை ஆண்மக்கள் அடக்கி வைத்திருப்பதால், அது உண்மையான சுயராஜ்யமாகாது. உண்மை நிலையினை ஆயுங்காலத்து உலகம் முழுதுமே பெண்மக்களை உணர்ந்துகொள்ள வில்லையென்றே கூறவேண்டும். இந்தியாவில் மாதர்கள் ஆடவருக்கு அடிமையாயிருக்கின்றனர். ஐரோப்பாவில் மாதர்கட்கு உண்மையழகே இல்லை. ஏராளமான பொருள் செலவுசெய்து ஆடம்பரமான ஆடைகள் அணிவதிலேயே அவர்கள் விருப்புக்கொள்ளுகின்றனர். இந்தியப் பெண்மணிகள் பொது விஷயங்களில் அதிக சிரத்தையெடுத்துக்கொள்ள வேண்டும்.

## பார்ப்பனத் திருடன் பிடிபட்டான்.

பல கொள்ளைகளில் சம்பந்தப்பட்டவரும், இதுகாறும் பிரபல போலீஸ்காரர்களால் பிடிக்கமுடியாதவரும், சமயத்துக்குத் தக்கவாறு மாறுவேடம் பூண்டவரும், தில்லை ஸ்தானத்தில் பிறந்தவரும், கண்டவர்களை நடுங்கச் செய்யும் சிங்கமும், சிதம்பரத்தில் நடந்த கொள்ளையில் தலைவராயிருந்தவருமாகிய சிங்கமய்யங்காரைப் பிடிக்க வேண்டுமென்று பல வாரண்டுகள் பிறப்பிக்கப்பட்டு அநேக மாதங்களாகியும் பிடிபடாமலிருந்து கடைசியாக கந்தர்வகோட்டையில் சிங்கம் என்பவர் தன் உருவத்தையும், தன் குலத்தையும், பெயரையும் மாற்றிக்கொண்டும், சந்தனப் பொட்டு வைத்துக் கொண்டும, சிவன் கோவிலுக்கு குருக்களாக இருந்துவந்த சிங்கமய்யங்காரை இதுவரை இவரைப் பிடித்துவர வேண்டுமென்ற பெரு முயற்சி கொண்ட கந்தர்வகோட்டை கள்ளர் ஸ்பெஷல் டிபார்ட்மெண்டிலிருக்கும் ஹெட் கான்ஸ்டேபிளாகிய தம்பி நாடார் என்பவர் இன்னார் என்று கண்டுபிடித்து தனது சப்இன்ஸ்பெக்டர் அவர்களிடம் தெரிவித்து அவருடையவும் மாஜி சுந்தரராஜுலு நாயுடு வுடையவும் உதவி கொண்டு 17—6—27-ல மாலை 5-30 மணிக்கு பிடித்து, தஞ்சாவூர் சப் மாஜிஸ்டிரேட்டு முன்பாகக் கொண்டுவரப்பட்டு, ஆலோசனை செய்து சிதம்பரம் சப் மாஜிஸ்டிரேட்டிடம் அனுப்பப்பட்டு, விசாரணை நடந்துவருகிறது. இதுகாறும் யாராலும் பிடிபடாதிருந்த சிங்கத்தைப் பிடித்து உலகினருக்குப் பயத்தை நீக்கிய தம்பி நாடாருக்கு நீண்ட ஆயுளும், உத்தியோக உயர்வும் மேன்மேலும் பெருக வேண்டுமாய்க் கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

## திண்டுக்கல் நாடார்களுக்கு ஓர் வேண்டுகோள்.

நாடார்கள் மிகுதியும் வசித்துவரும் இவ்வூரில் நமமவர்களுக்கென ஒரு வாசகசாலையாவது சங்கமாவது இல்லாமலிருப்பது விசனிக்கத்தக்கது. கிராமந்தோறும் வாசகசாலை, சங்கங்கள் ஏற்பட்டுவரும் இக்காலத்தில் திண்டுக்கல் நாடார்கள் சங்கமாவது வாசகசாலையாவது ஏற்படுத்த முயற்சிக்காமலிருப்பது வருந்தத் தக்க விஷயம். ஆகையால் இனியாவது வாசகசாலை, சங்கங்கள் ஏற்படுத்தி குல முன்னேற்றத்திலீடுபட்டு உழைக்குமாறு விண்ணப்பித்துக் கொள்ளுகிறோம். நாடார்மகாஜன சங்கமும் இவ்விஷயத்தில் கவனஞ்செலுத்தி வேண்டுவன செய்யுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

நாடார்குல நண்பன்.

## பள்ளியில் கோஷாமுறைகூடா.

பம்பாய் செயின்ட் சேவியர் கல்லூரி மாணவிகளுக்குள் பெண்களுக்கு தனிக் கலாசாலைவேண்டியா, வேண்டாமா? வெனபதுபற்றி விவாத நேரிட்டதில் பெண்களுக்குத் தனிக்கலாசாலை தேவையின்றெனப் பெரும்பாலான ஓட்டுகளால் தீர்மானிக்கப்பட்டது. இதனால் கோஷாமுறைகூடா தென்பது பெண்மாணவிகளின் பெரும்பாலாரின் அபிப்பிராயமாக விருக்கிறதென்பது புலனாகிறது.

அமிர்தசரஸ், ஜாலியன் வாலாபாக்கில் இந்தியரை படுகொலை புரிந்த ஜெனரல் டயர் பக்கவாத நோயால் அவஸ்தையுற்று மாண்டனராம். இம்மரணம் இந்தியர்க்கு சற்றும் துக்கம் தருவதன்றென உலகம் சொல்லும்.

பாளையங்கோட்டையில் 20-வயது சௌராஷ்ட்ர பிராமணப் பைய்யனொருவன் தன் சிநேகிதர்களுடன் "சடுகுடு" விளையாடிக் கொண்டிருந்தவலதுகால் பெருவிரல் மடங்கி கீழே விழுந்து இறந்துபோனான்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

(௨-ம் பக்கத்தின் தொடர்பு)

அதோடு மதுபானம்செய்தவரும் இனத்தாருக்குள் அது மிக்க வெறுக்கத்தக்கது என்ற உணர்ச்சியை எழுப்பி பாவச்செய்யவேண்டும். இது நம் குறிக்கோளைச் சீக்கிரத்தில் அடைவதற்கு அவசியமான ஏற்பாடு.

## உத்தியோகப் பதவிகள்.

துரைத்தன உத்தியோகங்களிலும், ராணுவ உத்தியோகங்களிலும் இந்தியர்களை நியமிக்கவேண்டும் என்ற விஷயமாய் ஆங்கிலேயர் நமக்குப் பல உறுதிகள் சொல்லியிருந்தும் அவைகளை நிறைவேற்றவில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இதைப்பற்றி டாக்டர் ருதர்போர்டு என்பவர் சமீபத்தில் வெளியிட்ட "தற்கால இந்தியர்" என்ற நூலில் பின்வருமாறு எழுதுகிறார். "வாக்குக்கொடுத்தும் அவைகளைக் காப்பாற்றாமலிருக்கிற ஆங்கிலேய துரைத்தனத்தைத் தாங்கிப் பேசுகிறவர்கள் லீ கமிஷன் வெளியிட்ட சிபார்சுகளை தங்களுக்கு ஆதாரமாக எடுத்துப் பேசுகிறார்கள். ஆனால், சம்பள அதிகமாயுள்ள உயர்தர உத்தியோக பதவிகள் ஒன்றிரண்டு நீங்கலாக எல்லாம் இன்னும் ஆங்கிலேயருக்கே கொடுபட்டு வருகிறது. தங்கள் சொந்த தேசத்து அரசியல் நிர்வாகத்தில் இந்தியர்களுக்கு இடமில்லை. அதற்குக் காரணம் அவர்கள் ஆங்கிலேயரில்லை என்பது தான் என்றும் இப்படி இந்தியர்களைப் பட்சபாதமாய் நடத்துவதற்கும் அதிகமாய் அரசியல் நிர்வாகத்தில் அவர்களுக்கு இடம் கொடாததற்கும் காரணம் இந்தியர்களுக்கு நிர்வாக ஆற்றலில்லை; ஆங்கிலேயருக்குத் தான் இருக்கிறது என்று ஒரு சாக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆங்கிலேயருடைய நிர்வாக ஆற்றலெல்லாம் இந்தியாவின் இரத்தத்தை உறிஞ்சுவதில்தான். இப்படி உறிஞ்சுவதில் ஆங்கிலேயரைப்போல் சமர்த்தர் யாருமேயில்லை. இந்தியாவின் வறுமைக்கெல்லாம் இதுவே முக்கிய காரணம். இந்த நிர்வாக ஆற்றல் என்னும் பூச்சி என்று ஒழியுமோ அன்றுதான் இந்தியாவுக்கு எல்லாவிதத்திலும் க்ஷேமம்" என்று எழுதுகிறார்.

சமீபத்தில் நடந்த தஞ்சை ஜில்லா பார்ப்பனரல்லாதார் மகாநாட்டின் தலைவர் ஸ்ரீமான் திவான்பகதூர் கிருஷ்ணன் நாயர் அவர்கள் சொன்னது நம் ஞாபகத்திற்கு வருகிறது. நம் நாட்டில் உத்தியோகம் வேண்டும் உத்தியோகம் வேண்டும் என்று கதறுவதில் ஐரோப்பியரே முதலாவர். கல்கத்தாவிலுள்ள ஐரோப்பிய சங்கத்து அங்கத்தினர் எங்களுடைய உற்றார் உறவினருக்கு உத்தியோகங்கள் தேடிக்கொடுக்க என்றும் பழிபோட்ட வண்ணமாயிருக்கிறார்கள் என்று சொன்னார். நமது தலைவர் கிருஷ்ணன்நாயர் அவர்கள் அப்படிச்சொன்னதற்கு "மதராஸ்மெயில்" பத்திரிகை வேலை பார்க்கும் ஆற்றலைக் கவனிக்காது ஐரோப்பியர் உத்தியோகத்தை நாடுகின்றார்களா என்பதில் கேள்வி கேட்டது. இந்தக் கேள்விக்கு உத்தரம் மேற்குறித்த ஆங்கில ஆசிரியரே சொல்லி விட்டார். அரசியல் நிர்வாகத்தில் இந்தியர்களுக்கு இடங்கொடாததற்கு அவர்கள் ஆங்கிலேயராய் இல்லாதது தான் காரணமென்றார். பாசாங்கு எல்லாம் ஒழித்துவிட்டுப் பேசுகிறதென்றால் எல்லோருமே பதவி வேட்டையாளர்கள் தான். இந்த வேட்டையில் நம்மைவிட நேர்மைத் தாழ்பவர்களுக்குத் தான் அதிக நாட்டம். ஆனதினால், இதை ஒப்புக்கொள்ளுதில் கூசவே வேண்டாம். நேர்வழியில்லாமல் கள்ள வழிகளில் உத்தியோக பதவிகளைக் கொள்ளையடிக்கப் பார்க்கிற அஷ்டபூதிகள் உத்தியோகப் பதவிகளை இழந்ததுபோல் சீ சீ என்று சொல்லுகிற கபட வார்த்தைகளில் நம்மவர் ஏமாந்து போக வேண்டாம்.

உத்தியோகப்பதவிகளில் ஐரோப்பியர்களிருக்கிற இடத்தில் இந்தியர்கள் இருக்க வேண்டுமென்பதற்கு டாக்டர் ருதர்போர்டு சொல்லும் நியாயங்களே பார்ப்பனர் இருக்கிற இடத்தில் பார்ப்பனர் அல்லாதார் இருக்கவேண்டுமென்பதை நன்கு வலியுறுத்துகின்றன. அவர் சொன்ன முறைப்படிச் சொல்லுகிறதென்றால்; பார்ப்பன நிர்வாக ஆற்றல் என்னும் பூச்சி என்று ஒழிகிறதோ அன்றுதான் நமக்கு எல்லா விதத்திலும் க்ஷேமம். இந்தப் பார்ப்பன ஆற்றல் என்ற பூதம் எப்போதாவது இறக்கொழியுமா?

ஏதோ சிறிது காலம் கண்ணுக்குப் புலப்படாமல் ஒழிந்த பாவனையாய்க் கிடக்கின்றது. ஆனால், வெகு சீக்கிரத்தில் அரசியல் கட்சிகளின் நிலைமையும் அதிகார வர்க்கத்தினர் நிலையும் தன் ஆட்டத்துக்கு ஏற்றதாய் இருக்கிறதென்று தெரிந்தவுடனே திடீரென மேலே கிளம்பி அட்டகாசம்பண்ண ஆரம்பித்துவிடுகிறது.

சென்னை துரைத்தனத்தார் தங்களை இப்பொழுது சூழ்ந்திருக்கும் சுற்றுப்படைகள் சொல்லுகிற உபதேசத்தைக் கேட்டுக் கேட்டு காரியாதிகளெல்லாம் ஒரே வாக்கில் பிராமண போஷணையாய் முடிந்துவிட்டது. உயர்தர உத்தியோகப் பதவிகளுக்கு இப்போது செய்துள்ள நியமனங்களைப் பார்த்தாலும் நமது கோப ஆவேசத்தையே மூட்டுவதாயிருக்கிறது. பொது ஜன அபிப்பிராயத்தையும் நியாயத்தையும் கொஞ்சமும் பொருட்படுத்தாது மிகத் துணிவாய் பார்ப்பனரையே இன்னும் நியமித்து வருகிறார்கள். உத்தியோகஸ்தர்களை இடம் பெயர்த்து மாற்றுகிற சமயங்களில் பார்ப்பனரல்லாதார் ஏதோ ஒருவர் இருவர் அடுத்த மேல் ஸ்தானத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கலாம். ஆனால், புது நியமனம் வந்தால் அது எப்படியும் பார்ப்பனருக்கே. மேலே உள்ளவர்களைப் பார்த்து கீழே உள்ள உத்தியோகஸ்தர்களும் அச்சமின்றி நீதியற்ற நியமனங்கள் செய்யத் துணிந்துவிட்டார்கள். உத்தியோகங்களில் இனவாரி சமத்துவம் ஏற்படுவதற்காக சட்டசபையில் பிறப்பித்த தீர்மானங்களெல்லாம் அமுலுக்கு வந்தபாடில்லை. அவை பல்பொடி மடிக்கவும் வெறுங்காளாகத்தான் கிடக்கின்றன. இது விஷயமாய் நாம் கண்டித்துப் பேசியதெல்லாம் வீணாய்ப் போயிற்று. நாம் கண்டித்துப் பேசப் பேச அக்கிரமம் அதிகப்பட்டுக் கொண்டுதான் வருகிறது.

உத்தியோகங்கள் எல்லாம் ஒரு இனத்தாருக்கே குத்தகையா? இந்த அநீதத்திற்கு முடிவுதான் உண்டா இல்லையா? நியாயம் என்பதை நம் நாட்டை விட்டு தேசப் பிரஷ்டம் தான் செய்து விட்டார்களா? நாம் குறை கூறுகிறதெல்லாம் இவ்வாறு வீணாய்ப் போய்க் கொண்டிருக்குமானால் ஜன சமுதாயம் இந்த சுயமரியாதைக் கேட்டை என்றும் பொறுத்துக் கொண்டேயிராது. இந்தக் குறைகளை நிவிர்த்திக்க வேறு முறைகளைத் தான் கையாள வேண்டுமென்று ஆரம்பித்துவிடுவார்கள். உத்தியோகத்திலும் அதிகாரத்திலும் நமக்குரிய பாகத்தை அங்கீகரிக்காமல் இவ்வாறு உதாசீனம் செய்வது நாம் தாங்கவொண்ணாதபடி நம் மனதைப் புண்படுத்துகின்றது. துரைத்தனத்தார் இன்னும் அந்தப் புண்ணை கோல் கொண்டு குத்துவார்களானால், அதனால் வருங்கேடு இன்னதென்று அவர்களுக்கு நாம் சொல்ல வேண்டியதில்லை. உத்தியோக நியமன போர்டார் செய்துள்ள அக்கிரமங்களையெல்லாம் "ஜஸ்டிஸ்" பத்திராதிபர் ஒவ்வொன்றாய் வெளியில் இழுத்து விட்டுவிட்டார். அந்தப் போர்டுக்காக வக்காலத்து வாங்கிப் பேசுகிறவர்கள் "நம்முடைய அறிவாளிகள் மற்ற இனத்தின் மேதாவிகளுக்கு ஒரு சிறிதும் குறைவு பட்டவர்களில்லை" என்று ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால், நம் அறிவாளிகள் வேண்டிய அளவு அதிகம் பேர் இல்லையாம். இந்தப் போர்டாருடைய அறிக்கையில் சேர்ந்திருக்கிற தொகை அட்டவணையைப் பார்த்தால் ஆளில்லை என்று சொல்லுவதெல்லாம் வீண் கட்சி என்று எளிதில் ஏற்பட்டுவிடும். வந்த அறிவாளிகளை துரத்தவிடுகிறார்கள். அறிவாளிகள் இன்னும் அதிகமாய் வந்து என்னசெய்ய? இந்திய கணக்குப் பரிசோதகத் துறையில் இப்போது அமர்ந்திருப்பவர்களெல்லாம் பார்ப்பனரே. அதில் வேண்டுமென்று பார்ப்பனரல்லாதார் ஏழு பேர் மறுப்போட்டனர். அவர்களுள் ஆறுபேர் எல்லாவிதத்திலும் அருகர்கள் தானென்று கருதப்பட்டார்கள். ஆயினும் போர்டார் லாயக்குள்ள அவ்வாறுவரில் ஒருவரையுங்கூட நியமனம் செய்ய

வில்லை. இதேமாதிரி பொருளாதார இலாக்காவிலும், சென்னை நகரத்து கவர்ன்மெண்டு ஆபீஸ்களிலும், சேவை மேல்பார்க்கும் இலாக்காவிலும், ஜெயில்களிலும் கிளார்க்கு வேலையெல்லாம் பார்ப்பனராகிய இனத்தாருக்கே பெரும்பாலும் கொடுபட்டிருக்கின்றன. உத்தியோக நியமன போர்டார் முப்பது டைப் அடிக்கும் குமாஸ்தாக்களை நியமிக்க வேண்டியிருந்தது. இதற்கு மனுப்போட்டவர்களில் லாயக்குள்ளவர்களாய் பார்ப்பனரல்லாதார் பதினேழுபேர் இருந்தார்கள். அவர்களில் நாலுபேரை மாத்திரம் எடுத்துக் கொண்டு மற்றவர்களைத் தள்ளிவிட்டார்கள். பார்ப்பனருக்கோ என்றால் இருபத்தாறு பேருக்கு வேலை கொடுத்தார்கள். டைப் அடிக்கும் வேலைக்கு அரிய பெரிய மேதாவிகளா வேண்டும்? வேலை பார்க்கத் திறம் உள்ளவர்கள் நம்மிடத்தில் இல்லாமற் போகவில்லை. நம்மைத் தள்ளி விடுவதற்குள்ள காரணங்கள் வேறு. நாட்டைக்குப் பிடித்திருக்கிறது ஏழரை நாட்டுச் சனி.

இவ்வாறு உத்தியோகங்களையெல்லாம் பாழாக்கிக் கொண்டு வருகிற உத்தியோக நியமன போர்டுக்குப் பதிலாக மாகாண கமிஷன் ஒன்றை ஏற்படுத்தப் போகிறார்களாம். அதற்கும் இதற்கும் வித்தியாசம் வருகிற கமிஷனால் ஏற்படப்போகும் பெரும் செலவு தான். மற்றப்படி ஒன்றுமில்லை. அந்தக் கமிஷனுக்குரிய அங்கத்தினர் நியமனம் இனம்பற்றி யிராது என்ற வதந்தியிருக்கிறது. அதன் பொருள் என்ன என்று நீங்களே பார்த்துக் கொள்வீர்களாக. ஒரே இனமாயிருக்குமென்பதே பொருள்.

இந்தக் கமிஷன் வருவதினால் வரி கொடுப்பவர் முதுகில் இன்னும் சுமை சுமத்துவதேயன்றி வேறில்லை. குறைந்த பக்ஷம் வருஷா வருஷம் இதற்காக இரண்டு லட்சம் ரூபாய் கொட்டி ஆக வேண்டும். தென்னிந்திய பத்திரிகை ஒன்று சொல்லுகிறபடி வருகிற கமிஷன் சிபார்சுக்காகவும் ஜாதிக்காகவும் நியமனம் செய்யாமல் திறமையொன்றையே பார்த்து நியமனம் செய்வார்கள் என்று துரைத்தனத்தார் எண்ணினால் அது முற்றிலும் தவறு என்று வெகு சீக்கிரம் கண்டு கொள்வார்கள். அகில இந்திய உத்தியோக கமிஷன், உத்தியோகங்களை எவ்வளவு சீர்திருத்தியிருக்கிறார்கள் என்பதை அறிந்து கொண்ட பிறகாவது மாகாணத்துக்கென்று ஒரு கமிஷன் ஏற்படுத்தக்கூடாதா? அதைக்கொஞ்சம் நிறுத்திவைத்தால் குடி மூழ்கிப் போய்விடுமா? நியமனங்கள் செய்வதற்காக இது ஒரு நியமனமா? இரண்டு லட்ச ரூபாயை அதற்குப் பாழாக்குவதா? இதற்கு ஆட்சேபனை இப்போதே சிறிது கிளம்பியிருக்கிறது. இன்னும் நமது ஆட்சேபனையை நன்கு வற்புறுத்தி இப்பெருங்கேட்டை முளையிலேயே முடித்துவிடவேண்டும்.

## காங்கிரஸ் பிரவேசம்.

இனி நாம் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயமொன்று. அது விஷயத்தில் நமக்குள்ள கவலைக்கோர் அளவில்லை அதாவது, இந்தியதேசிய காங்கிரஸ்சபையில் நமது கட்சியினர் சேர்ந்து கொண்டு பின்னர் கூடுமானால் அதன் நிர்வாகத்தை அடக்கி ஆண்டுகொண்டிருக்கிறது ஒரு அனர்த்தவாதமான சூழ்ச்சியாளரை அப்புறப்படுத்தவேண்டுமா? என்பது தான். இந்த விஷயத்தை கவனத்தோடு நாலு பக்கங்களிலும் பார்த்து ஆராய வேண்டும். அதனால் ஏற்படக் கூடிய லாப நஷ்டங்களையெல்லாம் எதிர்பார்த்து அவைகளுக்குத் தக்கவாறு செய்யவேண்டிய பணிகளை முன் கூட்டியே வகுக்கவேண்டும். ஜஸ்டிஸ் கக்ஷியினராகிய நாம் ஒரு துறையில் புகுந்து முன்வைத்தகாலைப் பின்வாங்க முடியாது என்பதை நீங்கள் நன்றாய் ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

அது விஷயத்தில் முதலில் எழுகிற கேள்வியாவது:—காங்கிரஸைச் சேருகிறதாயிருந்தால் நம்முடைய கட்சியின் நிலைமை எவ்வாறு இருக்க வேண்டும்? நமக்கும் காங்கிரசுக்கும் உள்ள சம்மந்தம் என்ன? என்றகேள்வி. தான் இதற்கு லெகுவாய் பதிலளிக்கிறது என்றால் மகமதியருக்கு அகில இந்திய முஸ்லீம் லீக்கு இருப்பதுபோலவும் வடக்கேயுள்ள இந்துக்களுக்கு இந்துமகா சபை இருப்பது போல

வும் தான் பார்ப்பனரல்லாதாருக்கு தென்னிந்திய நல உரிமைச் சங்கம். ஆனால் முஸ்லீம் லீக் இந்து மகா சபை ஆகிய இரண்டுக்கும் நமது சங்கத்துக்கும் ஒரு வித்தியாசமிருக்கிறதாய்ப் புலப்படுகிறது. அவைகள் தங்களுடைய அங்கத்தினர் அரசியல் விஷயமாக இன்ன கொள்கை தான் கொள்ள வேண்டுமென்ற திட்டம் ஒன்றும் செய்திருப்பதாய் காணவில்லை. தங்களுடைய சாயத்துக்கு ஏதேனும் ஆபத்து நேரிடுகிறதாயிருந்தால் எல்லோரும் ஒத்து நின்று பாதுகாக்க வேண்டுமென்ற ஒப்பந்தம் ஒன்றுக்குத் தான் அங்கத்தினர் கட்டுப்பட்டவர்கள். அவர்களுடைய அங்கத்தினர் ஜாப்தாவைப் பார்த்தால், அதிதீவிர குடியரசுக்கொள்கை உடையவர்களையும் பார்க்கலாம். குடியரசுக்கு நேர்விரோதமாயிருப்பவர்களையும் பார்க்கலாம். அது போல இவ்விரு திறத்தாருக்கும் இடையே நிற்கும் பல்வேறு தாரதம்மியம் உடைய கொள்கையையும் பார்க்கலாம். நமது மாகாணத்திய இந்துக்கள் கிறிஸ்தவர்கள் மகமதியர்கள் ஆகிய கூட்டத்தார் சங்கங்களும் இதை ஒத்தேயிருக்கின்றன. ஆனால் நம்முடைய நிலைமை வேறு. தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் அங்கத்தினரை ஒருங்கு சேர்ப்பது அவர்களுடைய பொது சமுதாய நன்மையைக் கோருவது மாத்திரமன்று; ஆனால் அரசியல் விஷயமாகவும் ஜனசமூக விஷயமாகவும் கொண்டுள்ள ஜீவாதாரமான உரிய கொள்கைகளையும் ஒருங்கு படுத்துகின்றன. நியாயமே நமக்கு மூலமந்திரம். அரசியலானாலும் சரி ஜனசமூகமானாலும் சரி பொருள் ஆதாரமானாலும் சரி எல்லாவற்றிலும் நியாயம் வேண்டும். நமது சங்கத்து விதியிலும் நம்முடைய மகாநாடுகளின் தீர்மானங்களிலும் நம்முடைய தலைவர்களுடைய வெளியீடுகளிலும் அறிவிக்கின்ற நமது கோட்பாடுகளை சில வாக்கியங்களில் சுருக்கிக் கூறிவிடலாம். ஒவ்வொரு இனத்திற்கும் அதற்கு உரித்தான அதிகாரத்தையும் பொறுப்பையும் திட்டஞ்செய்து கொடுக்காத ஒரு துரைத்தனமும் நம்தேசத்திற்கு ஒத்ததென்று ஒப்புக்கொள்ள முடியாது என்பது நம் துணிபு. நமக்கு வேண்டுமென்று சொல்லுகிற சமுதாயப் பொறுப்பாட்சி ஏதோ அரசியல் ஆராய்ச்சியாளருக்கு ஒருவிதமான திருப்தியைக் கொடுத்துவிட்டு ஏகபோக சாமான்யர்களுக்கே பயனை எல்லாம் கொடுக்கின்றபோலியான ஆட்சியல்ல. ஆனால் சகல இனத்தாருக்கும் பாரபட்சமின்றி பயனை அளிப்பதான உண்மையான குடி அரசே நமக்கு வேண்டுவது; அதை அடைவதற்கு இனவாரிப் பிரதிநிதித்துவம் ஒன்றே சாதனம்.

இரண்டாவதாக "இந்து சமுதாய ஒழுங்கு" என்று சொல்லுகிறதெல்லாம் தற்காலத்துக்குச் சிறிதும் ஒவ்வாததாய் பொருளும் பயனும் அதை விட்டு ஒழிந்து போன நிலைமையில் அதை "இந்து சமுதாய ஒழுங்கீனம்" என்று சொல்வதே பொருந்தும் என்று எண்ணுகிறோம். அதனால் ஒரு ஜாதிக்கும் மற்றொரு ஜாதிக்கும் ஒற்றுமையாவது பரஸ்பர நம்பிக்கையாவது ஏற்படுவது இல்லை. அவநம்பிக்கையும் விரோதமும் தான் ஏற்படுகிறது.

அது வகுத்த ஏற்பாடுகளினால் பார்ப்பனரைத் தவிர்த்து மற்ற இனத்தார் எல்லோருக்கும் மானஈனம் உண்டு பண்ணுகிறது. பிறப்பொன்று காரணமாக ஒருவன் மற்றொருவனைக் கீழாக எண்ணலாம் என்ற இந்த சமுதாயத்தின் ஏற்பாடுகளை அறவே ஒழிக்க வேண்டுமென்பது நமது நோக்கம். இதிலிருந்து இயல்பாகப் பிறக்கிற கோட்பாடுகள் எவையென்றால் ஒரு இனத்தார் தான் சமயகுருவாயிருக்க வேண்டும் என்பது ஒழிவதும் தீண்டாமை ஒழிவதும் இதுபோன்ற இதர இயக்கங்களுமேயாகும்.

இருகலை ஆட்சியை ஏற்படுத்திய அரசியல் திருத்தங்கள் விஷயமாகப் பயனளிக்கக்கூடியது எவ்வளவு உண்டோ அவ்வளவில் ஒத்துழைத்து அவைகளை நமக்கு ஆக்கிக்கொள்ள வேண்டும் என்பது நாம் கொண்டிருக்கும் கொண்டகொள்கை. இதனால் இரண்டு நன்மைகள் உண்டு. முதலாவது கிடைக்கக்கூடிய நன்மைகளை உள்ள

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

